# <u>In the Court of the District Munsif, Eraniel</u>

**Original Suit No. 84/2016** **Date:30.03.2026.**

**(PW1)- ஸ்ரீ மகேஷ்**

<u>**1** ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சாட்சி நீதிமன்ற உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

1. ஆவண எண் 1355/2004 ல் ராமசுப்பிரமணியன், துரைசாமி ஆகியோர் செந்தில்குமாருக்கு எழுதி ஆவணத்தில் பட்டிகை சொத்து 417/4 குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் மேற்படி ஆவணத்தில் ஒரு வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வரைபடத்தின் படி மேற்படி சொத்து 3 கண்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரோட்டை ஒட்டிய சொத்தின் விஸ்தீரணம் 19.600 செண்ட் என்றாலும் கடைசி கண்டம் 9 செண்ட் என்றாலும் சரிதான். நடுவில் அமைந்துள்ள கண்டம் ராமசுப்பிரமணி மற்றும் துரைசாமிக்கு பாத்தியப்பட்டது என்று எந்த ஆவணத்திலும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல, மேற்படி ஆவண எண் 1355/2004 ல் இணைத்திருக்கும் வரைபடத்தில் நடு கண்டத்தின் அளவுகளோடு அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2. மேற்படி நடு கண்டத்தில் தான் ராமசுப்பிரமணி மற்றும் துரைசாமிக்கு 1.5 செண்ட் உரிமையுள்ளது என்றால் சரிதான். மேற்படி நடு கண்டத்தையும் சேர்த்துதான் 35.100 செண்ட் மொத்த விஸ்தீரணம் வரும் என்றால் சரிதான். ஞானமணி என்பவருக்கு நடு கண்டத்தில் 3 செண்ட் உள்ளது என்றால் சரிதான், அதை தற்போது 1 ம் பிரதிவாதி கிரயம் பெற்றுவிட்டார். ஞானமணிக்கு மேற்படி 3 செண்ட் சொத்து எவ்வாறு உரிமைப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதே போல் மேற்படி நடு கண்டத்தில் எனது அப்பா நேசமணி எனது அப்பா கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி ராமசுப்பிரமணி மற்றும் துரைசாமிக்கு 35.100 செண்ட் உரிமை இருக்கும் பட்சத்தில் நான் குறிப்பிட்டவாறு 3 செண்ட் சொத்து ஞானமணிக்கும் 2 செண்ட் சொத்து எனது அப்பாவிற்கும் உரிமைபட்டிருக்காது என்றால் சரியல்ல, ஆவண எண் 1355/2004 ஆவணத்தில் மேற்படி விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. மேற்படி நடு கண்டத்தில் தான் ராமசுப்பிரமணி மற்றும் துரைசாமிக்கு 1.5 செண்ட் உரிமையுள்ளது எந்த ஆவணத்திலும் துலங்காது என்றால் சரியல்ல, மேப்டி ஆவண எண் 1355/2004 ல் துலங்கும். அவ்வாறு இருக்கும் பட்சத்தில் மேற்படி 19.600 செண்டிற்கு தெற்கு எல்லையாக மேற்படி நிலம் இருக்கும் வகையில் எந்த எல்கை

குறியீடும் இல்லை என்றால் சரியல்ல, எனது அப்பாவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது, ஏன் என்றால் மேற்படி 1355/2004 ஆவணம் பதிவு செய்வதற்கு முன்பே மேற்படி சொத்தை பொறுத்து எனது அப்பா நேசமணி முன் பணம் கொடுத்து பதிவு செய்யப்படாத ஒரு ஒப்பந்தம் போட்டுள்ளார். பொதுவாக ஒரு ஒப்பந்ததின் அடிப்படையில் ஒருவருக்கு சொத்தின் உரிமை வராது என்றாலும் அதன் அடிப்படையில ஒரு ஆவணத்தில் எல்கையாக அவரது சொத்து என்று குறிப்பிடமாட்டார்கள் என்றால் சரியல்ல, மேற்படி ஒப்பந்தம் இருப்பது 2 ம் பிரதிவாதிக்கு தெரிந்த காரணத்தினால் தான் அவ்வாறு குறிப்பிட்டார். நான் குறிப்பிடுமாறு எந்த ஒப்பந்தமும் போடபடவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

4. மேற்படி நான் குறிப்பிடுமாறு 1 செண்ட் நிலமோ, 1.5 செண்ட் நிலமோ மேற்படி 19.600 செண்ட் சொத்தை ஒட்டி இல்லையென்றால் சரியல்ல. மேற்படி 1355/2004 ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள வரைபடம் படி பட்டிகை சொத்தை அளந்தால் தென்மேற்கு மற்றும் தென்கிழக்கு மூலையில் எந்த வித அளவீடு கற்களும் இல்லையென்றால் சரியல்ல, தென்மேற்கு மூலையில் உள்ள பாறையில் குறியீடு உள்ளது, தென்கிழக்கு மூலையில் முதலில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிடும் போது ஒரு கல் இருந்தது மேற்படி கல் இரண்டாவது முறை பார்வையிடும் போது இல்லை. நான் குறிபிடுவது போல் எந்த கற்களும் இல்லையென்றாலும், முதலில் அழைத்து வரப்பட்ட அளைவையர் தாவா இடத்தில் எல்கை கற்களை கண்டுபிடிக்கமுடியாததால் மீண்டும் மற்றொரு நாள் வேறொரு அளவையருடன் தாவா இடம் அளக்கப்பட்டது என்றால் சரியல்ல, முதல் நாளில் புற்கள் அதிகம் இருந்ததால் அளக்க முடியவில்லை.

5. தென்மேற்கு மூலையில் கல்லில் உள்ள சங்கு முத்திரையை நான் முதல் நாள் பார்க்கவில்லையென்றால் பார்க்கவில்லை, முதல் நாள் அளக்கவில்லை பாறையின் மேல் முற்புதர் படர்ந்து இருந்தது. மேற்படி அளவையின் போது தாவா சர்வே எண் சொத்தில் வடக்கு எல்கை 0.60 மீ நீளம் காம்பவுண்ட் சுவருக்கு வெளியே வந்தது என்றால் சரியல்ல. தாவா சர்வே எண் சொத்து கிழக்கு பக்கம் வடகிழக்காக அளக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சொத்து கிழக்கு பக்கம் அளக்கப்பட்ட சமயத்தில் தென்கிழக்கு மூலையில் கல் இல்லாததால் நான் ஆவணம் படி குறிப்பிடும் எல்கையை தாண்டி தெற்கு பக்கம் அடுத்த சொத்தில் குறிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

6. மேற்படி ஞானமணியிடம் இருந்து 1 ம் பிரதிவாதி 3 செண்ட் சொத்தை கிரயம் பெற்றார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்திலும் வடக்கு பக்க எல்கையாக ராமசுப்பிரமணி மற்றும் துரைசாமி பெயரோ அல்லது அவர்களிடம் இருந்து கிரயம் பெற்ற செந்தில்குமார் பெயர் இருந்திருக்க வேண்டும் என்றால் மேற்படி ஆவணம் 1 ஆம் பிரதிவாதி கிரயம் பெற்ற ஆவணமாகும் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 1 ஆம் பிரதிவாதி ஆவணத்தின் அடிப்படையில் பட்டிகை சொத்து

அளவீடு செய்யப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி 19.600 செண்டிற்கு தெற்கு பக்கம் ராமசுப்பிரமணி மற்றும் துரைசாமி ஆகியோர்களுக்கு சொத்து இல்லை என்றாலும் அவர்களை சுவாதிணப்படுத்தி ஒரு செண்ட் நிலம் இருப்பதாக கூறி போலியாக ஆவணம் பெற்றுளோம் என்றால் சரியல்ல. மேற்படி ராமசுப்பிரமணி மற்றும் துரைசாமிக்கு மேற்படி இடத்தில் அவர்கள் விற்பனை செய்தது போக பட்டிகை புல எண் சொத்தில் ஒரு செண்ட் சொத்து பாத்தியம் உள்ளது என்பதை காட்ட நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**